பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
24 05 2025 **SATURDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மத்திய மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயல்பட்டால், எந்தவொரு இலக்கையும் எளிதாக எட்ட இயலும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. மாநிலங்களுக்கான வரிப் பகிர்வினை 50 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

3. கிராமப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு திமுக அரசு சொத்து வரி மற்றும் குடிநீர் வரியை உயர்த்தியிருப்பது கடும் கண்டனத்திற்குரியது என்று அஇஅதிமுக கூறியுள்ளது.

4. வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி வரும் செவ்வாய்க்கிழமை உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில், இந்தியாவின் **Naraen Pranav** வெண்கலப்பதக்கம் வென்றார்.

**>>>>>><<<<<<**

மத்திய மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயல்பட்டால், எந்தவொரு இலக்கையும் எளிதாக எட்ட இயலும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற நித்தி ஆயோக் அமைப்பின் ஆட்சிமன்ற குழு கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்பது நாட்டு மக்கள் அனைவரின் இலக்காக உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு மாநிலமும், நகரமும், கிராம பஞ்சாயத்து அமைப்புகளும் வளர்ச்சியடைந்த பகுதிகளாக உருவாக்குவதற்கு ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இது, வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான இலக்கினை முன்கூட்டியே எட்டுவதற்கு உதவிடும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இதனைக் கருத்தில் கொண்டு, வளர்ச்சிப் பணிகள் மேலும் விரைவுபடுத்தப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினார்.

ஒவ்வொரு மாநிலமும் ஒரு சுற்றுலா தலத்தை சர்வதேச தரத்திற்கு இணையாக மேம்படுத்த வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

இது, அப்பகுதியை சுற்றியுள்ள நகரங்களின் வளர்ச்சிக்கும் உதவிடும் என்று அவர் கூறினார்.

எதிர்கால தேவையையும் பூர்த்தி செய்யும் வகையில் நகரங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

140 கோடி மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் நிர்வாகம் செயல்பட வேண்டும் என்று பிரதமர் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மாநிலங்களுக்கான வரிப் பகிர்வினை 50 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மாநிலங்கள் தங்கள் வளர்ச்சிக்கான இலக்குகளை எட்ட, மத்திய அரசு பாகுபாடின்றி ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் திரு. மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டார்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய திரு. மு.க.ஸ்டாலின், பிரதமருடன் ஐந்து நிமிடங்கள் பேசியதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மு.க.ஸ்டாலின் 30 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

தமிழக கிராமப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு திமுக அரசு சொத்து வரி மற்றும் குடிநீர் வரியை உயர்த்தியிருப்பது கடும் கண்டனத்திற்குரியது என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப பகுதிகளுக்கு இரண்டு முறை சொத்து வரியை உயர்த்திய திமுக அரசு, தற்போது கிராமப்புறங்களில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் சொத்து வரியை உயர்த்தியிருப்பதாக கூறியுள்ளார்.

இதனை திமுக அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் காவல்துறையின் அத்துமீறல்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், காவல்துறை அத்துமீறல் சம்பவங்கள் தொடர்பான புள்ளி விவரங்களையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

காவல்துறையை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், இனியாவது சட்டம் ஒழுங்கை பராமரிக்க உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் 20க்கும் மேற்பட்ட மணல் குவாரிகளை திறக்க திமுக அரசு முடிவு செய்துள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிப்பதாக உள்ளது என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 13 மாவட்டங்களில் இந்த குவாரிகள் திறக்கப்படவுள்ளதாக வெளியான செய்திகளை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை கைவிட்டுவிட்டு, இயற்கை வளங்களையும், கனிம வளங்களையும் பாதுகாக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி வரும் செவ்வாய்க்கிழமை உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திருமதி. அமுதா கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நீலகிரி, கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - அமுதா 60 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, நீலகிரி மாவட்டத்தில் அதி கனமழைக்கான எச்சரிக்கையை அடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்ட ஆட்சியர் திருமதி, லக்ஷ்மி பவ்ய தண்ணீரு பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

(சவுண்ட் பைட் - லக்ஷ்மி 40 செகண்ட்ஸ்)

இதேபோல், கோவையில் அதி கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்ட ஆட்சியர் திரு. பவன்குமார், பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

(சவுண்ட் பைட் - பவன்குமார் 47 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் திருவள் ளூர் மாவட்டம், பழவேற்காட்டில் நெகிழிகள் சேரிப்பு மற்றும் கடற்கரையை தூய்மைப்படுத்தும் பணிகள் இன்று நடைபெற்றன.

கடல்வாழ் உயிரினங்களின் பாதுகாப்பை வலியுறுத்தி இந்த தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக ஆட்சியர் திரு. பிரதாப், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட்- பிரதாப் 34 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் பகுதியில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளை கண்காணிப்பு பொறியாளர் திரு. ராமலிங்கம் இன்று ஆய்வு செய்தார்.

>>>>>><<<<<

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் நடைபெற்று வரும் கோடை விழாவில் இடம்பெற்றுள்ள மலர்க் காட்சி, சுற்றுலாப் பயணிகளின் வரவேற்பை பெற்றுள்ளது.

>>>>>><<<<<<

நீலகிரி மாவட்டம், உதகையில் பலத்த காற்று வீசுவதால், படகு இல்லத்தில் படகு சவாரி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

குற்றாலம் மெயின் அருவியில் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட அண்ணாநகர் மண்டல அலுவலகத்தில் நவீன குழந்தைகள் பாதுகாப்பு மையக் கட்டிடத்தை மேயர் திருமதி. பிரியா இன்று திறந்து வைத்தார்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில், இந்தியாவின் **Naraen Pranav** வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஜெர்மனியின் **Suhl**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 10 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கத்துடன் பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் நீடிக்கிறது.

>>>>>><<<<<<

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலிருந்து ரோஹித் சர்மா ஓய்வு பெற்றதை அடுத்து, கேப்டனாக சுப்மன் கில் நியமிக்கப்பட்டுள்ளார்.

**>>>>>><<<<<<**

தாய்லாந்து ஓப்பன் குத்துச்சண்டை போட்டி, பாங்காக்கில் இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் ஆடவர் பிரிவில் 10 பேரும், மகளிர் பிரிவில் 9 பேரும் இதில் பங்கேற்றுள்ளனர்.

**>>>>>><<<<<<**

ஆஸ்திரிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Adita Rao** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>>><<<<<<**

**Tashkent-**ல் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Nitin Kumar Sinha – Ishaque Eqbal** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

**>>>>>>END<<<<<<**